# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## மாகாணமட்ட ஆண்டிறுதிப் பொதுப் பரீட்சை – 2015
## தமிழ்மொழியும் இலக்கியமும்

**தரம் - 11** **நேரம் : 2.00 மணித்தியாலங்கள்**

சுட்டெண்: ..........................................

புள்ளிகள் : 100

**பகுதி II**

**01) சுருக்கமான விடை தருக.**

i) நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறியமாட்டாதவன்

ii) ஓய்வுபெற்ற பாடசாலையின் அதிபர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். இதில் இடம் பெற்றுள்ள மயக்கத்தை நீக்கி வாக்கியத்தைத் திருத்தி எழுதுக.

iii) எழுதிய கவிதையைக் கிழித்து எறிந்தான் என்பதில் உள்ள எச்சங்களை இனங்கண்டு எழுதுக.

iv) ஒண்ணுமில்லையம்மா ஒங்களத்தான் பாக்க வந்தன் இத் தொடரை எழுத்து வழக்கில் மாற்றி எழுதுக.

v) சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்தானாம் ஆண்டி. இவ்வாக்கியத்தில் உள்ள எழுவாய் பயனிலையைத் தருக.

vi) பேச்சு வழக்கின் இரு வடிவங்களும் எவை?

vii) கொடிய யுத்தங்கள் காடுகளை அழிக்கின்றன. இவ்வாக்கியத்தைச் செயப்பாட்டு வினை வாக்கியமாக மாற்றி எழுதுக.

viii) பின்வருவனவற்றுள் சமயத்துறவிகளை விளிக்கும்போது கையாளப்படும் விளிப்புச் சொல் அன்புடைய, வணக்கத்துக்குரிய, அதிமேதகு, கௌரவ.

ix) சுருக்கம் எழுதும்போது தவிர்க்க வேண்டிய விடயங்கள் இரண்டு தருக.

x) வில்லுப்பாட்டு ஒன்றின் அமைப்பு முறையினை ஒழுங்குபடுத்தி எழுதுக
சபை வணக்கம், முடிவு, கதைவளர்ச்சி, சபையோருக்கு நன்றிகூறி மங்கலம் கூறல், கதை ஆரம்பம், கடவுள் வாழ்த்து

(10 x 2 = 20 புள்ளிகள்)

**02) பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.**

அ) இந்து சமுத்திரத்தின் நித்திலம் எனச் சிறப்பிக்கப்படும் ஈழம் அழகிய மலைகளையும் பாய்ந்தோடும் நதிகளையும் இயற்கைத் துறைமுகங்களையும் பசுமையான புல்வெளிகளையும் கொண்டமைந்துள்ளது. இத்தகைய எழில் கொஞ்சும் நம் நாட்டிலே இன்று கலாசாரச்

சீரழிவுகளும் சிறுவர் துஸ்பிரயோகங்களும் இடம்பெறுகின்றன. இவற்றை நீக்கி பூமியின் இயற்கைத் தன்மையைப் பேணி அதிலிருந்து அதிக நன்மைகளைப் பெற முயற்சித்தல் வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் ஒரு விளக்கக் கட்டுரை.

ஆ) மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம் என்பார்கள். இத்தகைய சிறப்புடைய மூத்தோர் எமது சொத்துக்களே ஆவர். இன்று மூத்தோரை மதித்தலும் அவர்களைப் பாதுகாத்தலும் அருகிக் கொண்டே வருகின்றது. நம்மவர்கள் சுய நலனுக்காக மூத்தவர்களை இன்று முதியோர் இல்லங்களிலும் இணைக்கின்றனர். இதனை கருத்திற்கொண்டு முதியோர் தின விழாவில் நீர் ஆற்றும் சொற்பொழிவு.

இ) ஸாகிர், ஸ்மயில் ஆகியோர் இணைபிரியாத நண்பர்கள் இவர்கள் இருவரும் கல்வி கற்று உயர்தரக் கற்கைக்காக வேறு வேறு பாடசாலைகளில் இணைகின்றனர். ஸாகிர் கணிதத்துறையில் கல்வி பயின்று ஒரு பொறியியலாளராக வெளிவந்துள்ளான். ஸ்மாயில் உயர்தரக் கற்கையை இடையில் நிறுத்தி வியாபாரநிலையம் ஒன்றை நடாத்துகின்றான். எதிர்பாராமல் நீண்ட காலத்தின் பின்னர் பேரூந்தில் இவ்விரு நண்பர்களும் சந்திக்கின்றனர். அப்போது இவர்கள் இருவருக்குமிடையே இடம்பெறும் உரையாடலை எழுதுக.

ஈ) கபில் பெற்றோரை இழந்த ஒருவன். தனது மாமாவின் அரவணைப்பில் வளர்ந்தவன் மாமா தான் கபிலுக்கு எல்லாமே. கபில் கல்வி கற்று சிறந்த மாணவனாக வளர்கின்றான். மாமனாரின் மகன் வினோஜ் கல்வியிலே பின்தங்கி இருப்பவன். கபிலே வினோஜ்சுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பான். ஆனால் வினோஜ் இதைப் பொருட்படுத்தாது கல்வியைப் பாதியிலே துறக்கின்றான். அதுமட்டுமன்றி தகாத நண்பர்களோடு சேர்ந்து 'மது'விற்கும் அடிமையாகி விடுகின்றான். இந்நிலையில் கபில் வினோஜ்சை மீண்டும் நல்வழிப்படுத்தி கல்விப்பாதையில் இணைக்கின்றான். இருவரும் கல்வியில் முன்னேறுகின்றனர். இக்கதையை அடிப்படையாகக் கொண்டு ஒரு சிறுகதை.

(25 புள்ளிகள்)

**03) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் சுருக்கத்தை 40 - 45 சொற்களில் உமது வசன நடையில் எழுதுக. சொற்களின் எண்ணிக்கையைத் தருக.**

இளங்கோ எழுதிய கண்ணகியின் காவியத்தைப் படியுங்கள். என்றும் படியுங்கள். பலமுறை படியுங்கள். கியூரி அம்மையாரின் வரலாற்றையும் கஸ்தூரியார் காந்தியின் வரலாற்றையும் திரும்பத் திரும்பப் படியுங்கள் இவை போன்றனவற்றை மேலும் மேலும் படித்துக்கொண்டிருங்கள். நல்லவர் நட்பு வளர்பிறை போல் வளரும் என்றார் வள்ளுவர். உங்கள் அன்பான இல்வாழ்க்கை வளர்பிறை போல் வளர வேண்டும் என விரும்புகின்றோம். அது என் வாழ்த்துதலில் இல்லை. நீங்கள் வாழும் வாழ்க்கை முறையிலேயே இருக்கின்றது.

நட்புக்காகப் பெரியோர்கள் சொன்ன அத்தனையும் கணவன் மனைவி வாழ்க்கைக்கும் பொருந்தும் நாலடியாரில் ஒரு பாட்டு உள்ளது. அதில் தக்காரின் நட்பை ஒரு கரும்பைக் குருத்தில் இருந்து அடிவரை சாப்பிடுவது போன்றது எனக் கூறப்பட்டிருக்கிறது. அதாவது வளர வளர இனிமை மிகுந்து கொண்டே செல்லுமாம். ஆனால் தகாதவரின் நட்பு இதற்கு நேர்மாறாக இனிமை குறைந்து கொண்டே போகுமாம். காரணம் என்ன? அவர் பண்புதான். அதுபோல் நீங்கள் நல்ல பண்புள்ளவர்களாக விளங்கினால் கோல் ஊன்றும் வயோதிப காலத்திலும் அன்பும் பண்பும் வளர்ந்து கொண்டே போகும். எனவே, நல்ல பண்பைக் காப்பது உங்கள் கடமை ஆகும்.

(10 புள்ளிகள்)

**04) பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பூரணமான வாக்கியங் களில் விடை எழுதுக.**

வண்ண மாலைக் கைபரப்பி
உலகை வளைத்த இருள் எல்லாம்
உண்ண எண்ணித் தண்மதியத்
துயந்தெழுந்த நிலாக்கற்றை
விண்ணும் மண்ணும் திசையனைத்தும்
விழுங்கிக் கொண்டே விரிநன்னீர்ப்
பண்ணை வெண்ணெய்ச் சடையன் தன்
புகழ் போல் எங்கும் பரந்துள்ளதால்

கானெல்லாம் மலர்ந்த முல்லை
ககன மீதெழுந்ததென்ன
வானெல்லாம் வயங்கு தாரை
நிரை நிரை மலர்ந்து தோன்ற
வேனிலான் விழவின் வைத்த
வெள்ளி வெண் கும்பமென்னத்
தூநிலா மதியம் வந்து
குண திசைத் தோன்றிற்றம்மா

i) இப்பாடலில் சித்திரிக்கப்படும் காட்சி எது?
ii) இப்பாடலில் காணப்படும் அணியை இனங்கண்டு எழுதுக.
iii) இப்பாடலில் யாருடைய புகழ் கூறப்பட்டுள்ளது?
iv) 'குணதிசை' எனக் கூறப்படும் திசை எது?
v) இப்பாடலில் உள்ள எதுகைச் சொற்கள் இரண்டு தருக.

(10 புள்ளிகள்)

**05)** உமது ஊரில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் என உம்மைக் கருதிக் கொண்டு உமது கிராமத்தின் பிரதான வீதி திருத்தப்படாமல் இருப்பதையும் இவ்வீதியின் முக்கியத்துவத்தையும் இது புனரமைக்கப்படாமையால் பள்ளி மாணவர்கள் முதல் சந்தைப்படுத்தும் விவசாயிகள் வரை அனைவரும் படும் துன்பங்களையும் குறிப்பிட்டு வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு இவ் வீதியைப் புனரமைத்துத்தரும்படி கேட்டு 100 சொற்களில் அமையுமாறு ஒரு கடிதம் எழுதுக.

அல்லது

அதிகரித்துச் செல்லும் போதைப்பொருள் பற்றியும் இது பள்ளி மாணவர்களிடமும் பரவி வருவது பற்றியும் குறிப்பிட்டு இதன் தாக்கங்களையும் பாதிப்புக்களையும் விளக்கி மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் வகையில் 100 சொற்களில் அமையுமாறு துண்டுப்பிரசுரம் எழுதுக.

(15 புள்ளிகள்)